(வலைபின்னல் மாற்றுமுறை)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 1999 ஆம் ஆண்டின் 1 ஆந் இலக்க, சரீரம் சிறி லங்கா தேசிய மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(1999, பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1999, பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II** *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : ரூபா 6.50* *தபாற் செலவு : ரூபா 3.50*

***1999 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சரீரம் சிறி லங்கா தேசிய மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்***

[*1999 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*.]

*ச. வ.— ஓ 28/96*

***சரீரம் சிறி லங்கா தேசிய மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்***

"*சரீரம் சிறி லங்கா தேசிய மன்றம்*" என்றழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான கழகமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட எல்லாக் குறிக்கோள்களையும் சொல்லப்பட்ட கழகத்துடன் தொடர்புடைய கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென மட்டக்களப்பு மாவட்டம், ஆரைப்பத்தி, தாழங்குடா என்னுமிடத்தில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டிருந்ததாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட கழகமானது எந்தப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரையில் வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட வின்னப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிச் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சரீரம் சிறி லங்கா தேசிய மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். கருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும், (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சரீரம் சிறி லங்கா தேசிய மன்றத்தில் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்மேல் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "சரீரம் சிறி லங்கா தேசிய மன்றம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் பெற்றதாயிருத்தல் வேண்டும். சரீரம் சிறி லங்கா தேசி மன்றத் தைக் கூட்டி ணைத்தல்.

H - 022545

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) எல்லாச் சமூகத்தினரிடையேயும் அமைதியையும் ஒற்றுமையையும் பேணுதல் ;

(ஆ) மக்களிடையே சாதி, மொழி, மத,அரசியல் மற்றும் இன வேற்றுமைகளை ஒழித்துக்கட்டுதலை ஊக்குவித்தல் ;

(இ) சகல மத, பண்பாட்டு மற்றும் பொருளாதாரத் தொகுப்புகளை ஐக்கியப்படுத்தும் சங்கமொன்றைத் தாபித்தலும் ஊக்குவித்தலும் ;

(ஈ) வறியவர்களையும் அத்துடன் பாதிப்படைந்த ஏனைய மக்களையும் "விழிப்புத் திட்டத்தி" னுள் கொணர்ந்து அவர்களைச் சுயதொழிற் திட்டங்களில் ஈடுபட ஊக்குவிததல்;

(உ) கிராமிய இடப்பரப்புகளிலுள்ள மக்களிடையே சேமிப்பை ஊக்குவித்தலும் துரிதப்படுத்தலும் ;

(ஊ) பாடசாலைக்கல்வி, சுகாதாரக்கல்வி மற்றும் சூழற்கல்வி என்பவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்ச்சியைப் பொதுமக்களிடையே ஏற்படுத்துதல் ;

(எ) மேற்காண் குறிக்கோள்களை எய்துவதற்கு ஏதுவான வேறு எல்லாக் காரியங்களையும் கருமங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்திற்கும் அமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறானஅல்லது விரும்பத்தக்க வாறான எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் காரியங்களையும் செய்வதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும் நடாத்தவும் முடிவுறுத்தவும் பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி பணங்களைக் கடனெடுக்கவும், உள்நாட்டில் அல்லது வெளிநாடுகளில் மானியக் கொடைகளாகப் பெற்றுக்கொள்ளவும் அல்லது சேகரிக்கவும் அதன் நிதிகளை முதலீடு செய்யவும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலைநீக்கஞ் செய்தல் ஆகியவற்றுக்குமான தத்துவங்களும் அடங்கும்.

அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், தலைவர், செயலாளர் அத்துடன் பொருளாளர் மற்றும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலிருக்கும் விதிகளுக்கிணங்க தெரிவு செய்யப்படக்கூடிய மற்றும் 16 பேருக்குக் குறையாத உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்ட முகாமைக்குழுவொன்றின் மூலம் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலிருக்கும் விதிகளுக்கிணங்க நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைக்குழு இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய தேதியன்று மன்றத்தின் முகாமைக்குழுவில் உறுப்பினர்களாக இருந்தோரும் இச்சட்டத்திற்கான அட்டவணையில் பெயர் குறித்துரைக்கப்பட்டுள்ளோரையும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதல், அவர்கள் விலகுதல், ஓய்வுபெறுதல் அல்லது அவர்களை வெளியேற்றுதல், பதவிதாங்குநர்களையும் முகாமைக்குழு உறுப்பினர்களையும் தெரிவுசெய்தல் என்பவற்றுக்காகவும் பதவிதாங்குநர்களினதும் முகாமைக்குழுவினதும் கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைக்காகவும் அத்துடன் வேறுவகையில் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்காகவும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது வேறேதேனும் எழுத்து மூலமான சட்டத்திற்கு முரணாக விராத விதிகளை, ஆண்டுப் பொதுக் கூட்டமொன்றில் அல்லது அந்நோக்கத்திற்கென இரண்டு வார அறிவித்தலுடன் கூட்டப்பட்ட ஏதேனும் ஆண்டுப் பொதுக் கூட்டமெதிலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டுக்குக் குறையாதோரின் பெரும்பான்மை வாக்குக்கொண்டு காலத்துக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும், அதே போன்ற கூட்டத்திலும் அதே முறையிலும் அவை மாற்றப்படலாம், திருத்தப்படலாம், நீக்கப்படலாம் அல்லது அவற்றுக்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(2) கூட்டத்தாபனத்தின் சகல உறுப்பினர்களும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்குஅமைந்தோராதல் வேண்டும்.

மன்றத்தினால் அல்லது மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலனவான கடன்கள்.

**7.** இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்துக் குள் எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதலும், கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அத்திகதியன்று செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்குச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்திற்குற் செலுத்தப்படல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.

**8.** கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடுத்துமாற்றல், இறுதி விருப்பாவனக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள, அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கையேற்கவும் வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றலுடையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுமுள்ள முழுத்தத்துவத்துடன், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் சொல்லப்பட்ட கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**9.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, தலைவர் மற்றும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்குமைய அங்கீகாரம் பெற்ற அத்தகையோரான அத்தனை ஆட்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான எந்தச் சாதனத்திலும் இடப்படலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்ப மிடுவதற்குப் புறம்பானதாதல் வேண்டும்.

குடியரசினதும் ஏனையோர் களினதும் உரிமைகளைப் பேணுதல்.

**10.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப் பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துவதாதலாகாது அல்லது பாதிப்பதாதலாகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**11.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**அட்டவணை** (பிரிவு 5 (2))

| | |
|---|---|
| தலைவர் | – திரு. ஏ. லோகேஸ்வரன் |
| உபதலைவர்கள் | – திரு. ஏ. சிவலிங்கம் |
| | – திருமதி எல். ஆனந்தி |
| | – திரு. எம். காசிப்பிள்ளை |
| பொதுச் செயலாளர் | – திரு. கே. வன்னியசிங்கம் |
| மேலதிகச் செயலாளர்கள் | – திரு. ஏ.கிருஷ்ணமூர்த்தி |
| | – திரு. எம். புஷ்பராஜ் |
| | – திரு. எம்.சுந்தரலிங்கம் |
| பொருளாளர் | – திரு. கே. வெள்ளைச்சாமி |
| நிறைவேற்று உறுப்பினர்கள் | – திரு. கே. பொன்னம்பலம் |
| | திரு. வி. ஜேசுதாசன் |
| | – திரு. ரி. பப்டிஸ்ற் |
| | – திரு. கே. லிங்கராஜ் |
| | – செல்வி ரி. சியாமளா |
| | – திரு. ரி. சித்தம்பலம் |
| | – செல்வி என். நிஸியந்தி |
| | – செல்வி எம். டிலானி |
| ஆலோசகர்கள் | – திரு. கே. தங்கராஜா |
| | – திரு. ஆர். துரைராஜசிங்கம் |
| | – திரு. ஜி. ராதாகிருஷ்ணன் |

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆம் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர். அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*